சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 13.11.2019

அவசரக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, விகாரி வருடம் நவம்பர் மாதம் –ம் நாள் (நவம்பர் திங்கள் 13–ம் நாள்:– 13.11.2019) புதன் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.01**

சின்னமனூர் நகராட்சியில் **2019–2020ம்** ஆண்டு திட்ட நிதியின் கீழ் ரூ.**550.00** இலட்சத்திற்கு கீழ்க்கண்டவாறு மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை மற்றும் பேவர் பிளாக் சாலை பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட மதிப்பீடுகள் தாயர் செய்து நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடும் வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாமலை நகர், அண்ணாமலை நகர் குறுக்குத் தெருக்கள், மயானம் ரோடு, கண்ணம்மாள் கார்டன், லெட்சுமி நகர், லெட்சுமி நகர் குறுக்குத் தெரு, அய்யனார்புரம் குறுக்குத் தெரு மற்றும் பள்ளிக்கோட்டைபட்டி குறுக்குத் தெருக்களில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைக்கும் பணி மற்றும் பொன் நகர் குறுக்குத் தெரு, அய்யனார்புரம் குறுக்குத் தெரு, உழவர்சந்தை சாலை, அழகர்சாமி நகர் குறுக்குத் தெரு, உயர்நிலைபள்ளி சாலை, காந்தி நகர் காலனி 8வது குறுக்குத் தெரு மற்றும் அண்ணா சிலை முதல் வண்டிப்பேட்டை சந்திப்பு வரை பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி. | 275.00 |
| 2. | இந்நகராட்சிக்குட்பட்ட சிவசக்தி நகர், மின்னகர் குறுக்குத் தெரு, உரக்கிடஙகு சாலை, முத்தாலம்மன் கோவில் சாலை, சிவராமன் தெரு, பட்டாளம்மன் கோவில் 1வது தெரு, குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் சாலை, பொன்னகர் மெயின் சாலை, சந்தைபுதூர் தெரு, ரரதாகிருஷ்ணா ரைஸ்மில் தெரு, கீழப்பூலானந்தபுரம் மெயின் சாலை, காலனி பள்ளி குறுக்குத் தெருக்கள், சாமிகுளம் மெயின் சாலை, காந்தி நகர் காலனி 6வது தெருக்களில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைக்கும் பணி | 275.00 |
| **மொத்தம்** | | **550.00** |

**அலுவலகக் குறிப்பு:–** . 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சியில் பொது நிதியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் இப்பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ.550.00 இலட்சத்திற்கு அரசு முழு மான்யத்துடன் கூடிய நிதி வேண்டி கருத்துரு சமர்ப்பிக்கலாம்.

**தீர்மான எண், நாள்** **727, நாள்.13.11.2019**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.02**

சின்னமனூர் நகராட்சி பொது சுகதார பிரிவில் டெங்கு உள்ளிட்ட தொற்று நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு 37 தற்காலிக DBC பணியாளர்களை கொண்டு 27 வார்டுகளில் உள்ள 12000க்கு அதிகமான வீடுகள், வணிக நிறுவனங்கள், கோவில்கள் மற்றும் பள்ளிகளுக்கு கொசு புழுக்களை ஒழிக்கும் பணி மற்றும் முதிர் கொசுக்களை ஒழிக்கும் பணி நடைபெற்று வரும் சூழ்நிலையில் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற காணொலிக்கான ஆலோசணைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட துணை சுகாதார இணை இயக்குநர், தேனி மாவட்ட பூச்சியியல் வல்லுனர் மற்றும் மாவட்ட கொள்ளை நோய் நிபுணர் கலந்து கொண்டு டெஙகு மற்றும் கொசுக்களின் மூலம் பரவும் தொற்று நோய்களையும், தண்ணீர் மூலம் பரவும் தொற்று நோய்களையும் கட்டுப்படுத்த பொது மக்களிடம் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக வீடுகள் தோறும் டெஙகு விழிப்புணர்வு நோட்டீஸ் வழஙகவும், விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டவும் மற்றும் DBC பணியாளர் களப்பணிக்கு பயன்படும் விதமாக வாராந்திர மல்டி கலர் ஸ்டிக்கர் ஒட்டி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த மேற்கண்ட ஆலோசனை கூட்டத்தில் அறிவுறுத்தியதை தொடர்ந்து மேற்படி 12 எண்ணம் நோட்டீஸ், காலண்டர், ஸ்டிக்கர் விநியோகிக்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.500000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2.மேற்கண்ட சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர்(**பொ**) மற்றும் தனி அதிகாரி அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **728, நாள்.13.11.2019**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.03**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24, மயானம் செல்லும் சாலையில் உள்ள பாலம் சிதலமடைந்து வாகனஙகள் செல்ல முடியாத நிலை இருப்பதால் பொது மக்களின் நலன் கருதி மேற்படி மயான சாலையில் உள்ள பாலத்தினை இடித்து விட்டு புதியதாக பாலம் அமைக்க உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண், நாள்** **729, நாள்.13.11.2019**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.04**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN60Z2921 என்ற எண்ணுடைய டிராக்டர் வாகனத்திற்கு 2019–2020 ஆம் ஆண்டிற்கான தகுதிச் சான்று பெறும் பொருட்டு மேற்கண்ட வாகனத்திற்கு மராமத்துப் பணியினை அங்கீகரிக்கப்பட்ட பணிமனையான மகேந்திரா டிராக்டர்ஸ் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற ஸ்ரீ அய்யனார் மோட்டார்ஸ் என்ற பணிமனையில் பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.116972/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்த மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.**
2. **பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழஙகியதை மன்றம் ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள் 730, நாள்.13.11.2019**

**தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.05**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2018–2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற திட்டப் பணிகளை தினசஙகு நாளிதழில் (தீபாவளி மலர் 2019) பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ.15600/–ஐ Dhinasangu Daily அவர்களுக்கு வழஙக மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.0248/2019/இ1).**

**தீர்மான எண், நாள் 731, நாள்.13.11.2019**

**தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.06**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சீப்பாலக்கோட்டை ரோட்டில் அமைந்துள்ள குடிநீர் விநியோக தொட்டிகளில் உள்ள காவலர் அறையினை இடித்து விட்டு புதியதாக காவலர் அறை கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு 14.10.2019ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் – 0.40% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் – 1.65% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம்.

**அலுவலகக் குறிப்பு:– குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.40%) திரு.கே.வனராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.3826/2019/இ1)**

**தீர்மான எண், நாள் 732, நாள்.13.11.2019**

**தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.07

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3, சாமிகுளம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அருகில் புதிய காவலர் அறை கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு 14.10.2019ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் – 0.30% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் – 0.75% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம்.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.30%) திரு.கே.வனராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.3829/2019/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **733 , நாள்.13.11.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

## பொருள் எண்.08

இந்நகராட்சி அலுவலகத்தின் முன் உள்ள சுற்றுச் சுவரினை உயர்த்தி கட்டும் பணி மற்றும் ஆணையாளர், பொறியாளர் ஆகியோர்களின் வாகனங்கள் நிறுத்துவதற்கு கூரை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு 14.10.2019ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் – 0.50% சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் –0.35% சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.35%) திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3830/2019/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **734 , நாள்.13.11.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

## பொருள் எண்.09

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சந்தை தெரு, சந்தை உட்புறம், சித்தன் கோவில் அருகில் மற்றும் சொக்கநாதபுரம் போன்ற பகுதிகளில் பாதாள சாக்கடை திட்ட பைப்லைன் அடைப்பு மற்றும் பைப் லைன் உடைப்பு பணிகளை சரி செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு 14.10.2019ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் – 0.20% சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் – 0.30% சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்.

**அலுவலகக் குறிப்பு:–** **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.20%) திரு.கே.வனராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3828/2019/இ1)**

**தீர்மான எண், நாள்** **735 , நாள்.13.11.2019**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.10

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான பள்ளிகளில் மழைநீர் சேகரிப்பு, மரம் நடுதல் மற்றும் சிறு பழுதுகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு 17.07.2019ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்தக்காரர் – 0.20% சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு.
2. திரு.கே.முனிசாமி, ஒப்பந்தக்காரர் –0.40% சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்

**அலுவலகக் குறிப்பு:–** **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.20%) திரு.எஸ்.சந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2711/2019/இ1)**

**தீர்மான எண், நாள்** **736 , நாள்.13.11.2019**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.11

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை இணைப்பு பணிகள் மற்றும் குடிநீர் குழாய் இணைப்பு பணிகள் நடைபெற்ற பொழுது பழுது ஏற்பட்ட சாலை மற்றும் மழைநீர் வடிகாலினை சரி செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு 14.10.2019ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் – 0.25% சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் – 0.10% சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்.

**அலுவலகக் குறிப்பு:–** குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.25%) திரு.கே.வனராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3827/2019/இ1)

**தீர்மான எண், நாள் 737 , நாள்.13.11.2019**
**தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.12

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான புதை குழி வடிகால் திட்டத்தினை நவம்பர் 2019 முதல் ஒப்பந்த அடிப்படையில் செயல்படுத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு 15.10.2019ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் – 1.15% சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் – 0.50% சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு

**அலுவலகக் குறிப்பு:–** குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.50%) திரு.திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3915/2019/இ1).

**தீர்மான எண், நாள் 738 , நாள்.13.11.2019**
**தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.13

இந்நகராட்சிக்குச் சொந்தமான நேருஜீ பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலைய கடைகள், உணவகம் மற்றும் கட்டணக் கழிப்பறைகளை நகர்மன்றத் தீர்மான எண்.665, நாள்.18.07.2016 ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்படைக்க முன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 1 கடைக்கு 17.10.2019 ஆம் தேதி மறு பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரியதில், வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி கொடுக்க முன்வந்துள்ளார். எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளி விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | கடை எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை (தொகை) |
|---|---|---|---|
| 1. | 27 | பா.மகேந்திரன் த/பெ.பி.பாலு<br>224A, சீப்பாலக்கோட்டை ரோடு,<br>வார்டு எண்.17, சொக்கநாதபுரம்,<br>சின்னமனூர். | ரூ.2000/– |

அலுவலகக் குறிப்பு:– கடை எண்.27க்கு மாத வாடகை ரூ.2000/–க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எவரும் பொது ஏலம் கோரப்படவில்லை. வாடகை மதிப்பு ரூ.2000/– ஆனது சர்கார் மதிப்புக்கு குறைவாக உள்ளது. எனவே மறு ஏலம் மற்றும் பொது ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம். (ந.க.எண்.370/2017/அ2)

தீர்மான எண், நாள் 739 , நாள்.13.11.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.14

இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.22, கஸ்பா ரோட்டில் உள்ள குடிநீர் பகிர்மான குழாயில் அவ்வப்போது உடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் கலந்து செல்வதால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. மேலும் வார்டு எண்.27, ஒத்தவீடு பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய் பழுதடைந்து உள்ளது. எனவே மேற்கண்ட குடிநீர் குழாய்களை மாற்றி அமைக்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.200000/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்காணும் செலவினத்தை தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4229/2019/இ2).

தீர்மான எண், நாள் 740 , நாள்.13.11.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.15**

இந்நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தின் தென் பகுதி மற்றும் கிழக்குப் பகுதியில் இரு சக்கர வாகன நிறுத்தும் இடத்திற்கு பொது ஏலம் விடப்பட்டு, மேற்படி இடத்தின் குத்தகைதாரரால் தகர செட் அமைக்கப்பட்டுள்ளது. மழைக்காலஙகளில் தகரத்தில் விழும் நீர் அருகில் உள்ள திரு.S.V.முத்துராமலிங்கம் என்பவரின் கட்டிடத்தினை சேதப்படுத்துவதாக தெரிவித்து, அதனை நிவர்த்தி செய்ய வேண்டி, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில், தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஆணையாளர் சின்னமனூர் நகராட்சி ஆகிய இருவரை பிரதிவாதிகளாக சேர்த்து W.P.(MD) NO.21725/19ன்படி வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் நகராட்சியின் சார்பாக ஆஜராவதற்கு அரசு வழக்கறிஞர் திரு.எம்.கருப்பசாமி பாண்டியன் என்பவரின் 18.10.2019ம் நாளிட்ட கடிதத்தின்படி, வழக்கறிஞர் கட்டணமாக தொகை ரூ.9500/—ஐ வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1859/2019/இ2)**

**தீர்மான எண், நாள்** **741 , நாள்.13.11.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.16**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்திரவின்படி வாக்காளர் பட்டியல் சிறப்பு முறை சுருக்கத் திருத்தம் 2020க்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் சேகரிக்கும் விவரஙகள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிக்கு கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | விவரம் | எண்ணம் | தொகை |
|---|---|---|---|---|
| 1. | S.கார்த்திகேயன் | வாக்காளரின் சரியான தவறான பதிவிற்கும் தவறான பதிவை திருத்தம் செய்ய | 1 | ரூ.1.20 |
| 2. | S.மோகன்ராஜ் | வாக்காளரின் சரியான பதிவிற்கு | 1 | ரூ.1.40 |
| | | வாக்காளரின் தவறான பதிவை சரி செய்ய (புகைப்படம் பதிவேற்றம் உட்பட) | 1 | ரூ.2.00 |

அலுவலகக் குறிப்பு:—

1. **வரிசை எண்.1ல் காணும் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**
2. **அவ்வப்போது இணையதளத்தில் செய்து முடிக்கும் பணிக்கு உரிய தொகையினை வழஙகுவதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3403/2019/எப்1)**

**தீர்மான எண், நாள்** **742 , நாள்.13.11.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

பொருள் எண்.17

சின்னமனூர் நகராட்சிக்கு சொந்தமான வன்னான்கரடு பகுதியில் உள்ள குப்பை கிடங்கில் தேங்கியுள்ள குப்பைகளை அப்புறப்படுத்துதல் மற்றும் வாகனங்கள் குப்பை கொட்டுவதற்கு வழியினை JCB இயறந்திரம் மூலம் மேற்கொள்ளும் பணிக்கு 14.10.2019ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்கண்ட விவரப்படி இரண்டுஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் – ரூ.900/ ஒருமணிநேரத்திற்கு
2. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் – ரூ.950/ ஒருமணிநேரத்திற்கு

**அலுவலகக் குறிப்பு:–** **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **743 , நாள்.13.11.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

பொருள் எண்.18

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் TN60W1755 என்ற டம்பர் பிளேசருக்கு 2019–2020 ஆம் ஆண்டு தகுதிச் சான்று புதுப்பித்தல் தொடர்பாக மேற்கண்ட வாகனத்திற்கு மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.100000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.3806/2019/எச்1).**

**தீர்மான எண், நாள்** **744 , நாள்.13.11.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******